
# தமிழ்நாடு அரசு
# வணிகவரித்துறை




# GST – ஒரு கண்ணோட்டம்

## சரக்குகள் மற்றும் சேவை வரிச்சட்டம் (GST), 2017

- நாடு முழுவதும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை **(GST)** அறிமுகப்படுத்துவதற்கான அரசியலமைப்பு (101–வது திருத்த) சட்டம், 2016 குடியரசுத் தலைவர் அவர்களால் **செப்டம்பர் 8, 2016** அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

- அதன்படி, **1–7–2017** முதல் **GST** நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டுள்ளது.

- இந்த சட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசுகளால் விதிக்கப்பட்டு வந்த சில வரிகளை உள்ளடக்கி **GST** எனப்படும் ஒரே வரி விதிக்கப்படுகிறது.

- **GST**–ன் கீழ் உள்ளூர் விநியோகத்தின் போது சரிசமமாக மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி **(CGST)** மற்றும் மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி **(SGST)** விதிக்கப்படுகிறது.

- **GST** தொடர்பான அனைத்து சீரமைப்பு நடவடிக்கைகள் "ஒரு தேசம் ஒரு வரி" என்கிற புதிய வரி விதிப்பு முறையை அமல்படுத்த பெரிதும் உதவி உள்ளன.

- இடைமாநில விநியோகத்தின் (inter-state supply) மீது **IGST–**யிலும் சரிசமமாக **CGST** மற்றும் **SGST** ஒரே வரியாக விதிக்கப்படுகிறது.

- **GST**–ன் கீழ் நாடு முழுவதும் ஒரே மாதிரியான வரிகள்/வரிவிலக்குகள் (Taxes/Exemptions) உள்ளன.

- **GST** வரிமுறையினை அமல்படுத்திட ஏதுவாக நான்கு சட்டங்கள் அதாவது **CGST, UTGST, IGST** மற்றும் **Compensation Law** ஆகியவை **GST Council**–ல் விவாதிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டு உள்ளன. அதனைத் தொடர்ந்து **TNGST Law** சட்டமன்றப் பேரவையில் சட்டமாக்கப்பட்டுள்ளது.



**GST-ன் அம்சங்கள்**

| VAT | GST |
|---|---|
| சரக்குகளின் விற்பனை (sales) மீது விதிக்கப்படும் வரியாகும் | சரக்குகள் மற்றும் சேவைகளின் விநியோகத்தின் (supply) மீது விதிக்கப்படும் வரியாகும் |
| சரக்குகள் அனுப்பப்படும் மாநிலங்களில் விதிக்கப்படும் வரியாகும் (origin based) | சரக்குகள் நுகரப்படும் மாநிலங்களில் விதிக்கப்படும் வரியாகும் (destination based) |
| வெளிமாநில கொள்முதல் மீது செலுத்தும் வரிக்கு உள்ளீட்டு வரி வரவு (ITC) கிடையாது | வெளிமாநில கொள்முதல் மீது செலுத்தும் வரிக்கு உள்ளீட்டு வரி வரவு (ITC) உண்டு. |
| இறக்குமதியின் போது வரி விதிக்கப்படுவதில்லை | இறக்குமதியின் போது வரி விதிக்கப்படும் |

## வணிக வரி வருவாய் விவரம்

| | |
|---|---|
| 2016–17 | ரூ. 66, 189.37 கோடி (வரி திருப்புகை நீங்கலாக) |
| 2017–18 | ரூ. 73, 148.28 கோடி (GST மற்றும்TNVAT) |
| TNVAT + GST க்கு உட்படுத்தப்பட்ட வரி வளர்ச்சி விகிதம் (1.4.2017 முதல் 31.3.2018) | 10.51% |
| GST க்கு உட்படுத்தப்பட்ட வரி வளர்ச்சி விகிதம் (1.7.2017 முதல் 31.3.2018) | 11.49% |
| GST க்கு உட்படுத்தப்பட்ட வரி (2018–19 (ஏப்ரல் &மே) | 16.18% |



## GST – மன்றம் அமைப்பு

- மைய அரசின் நிதி அமைச்சர், இணை அமைச்சர் (நிதி) மாநிலங்களின் நிதி / வரி அமைச்சர் ஆகியோர் உறுப்பினர்கள் ஆவர்.
- தலைவர் – மைய நிதி அமைச்சர்
- துணைத் தலைவர் – மாநில அமைச்சர்களில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
- குறைவெண் வரம்பு (Quorum) – மொத்த உறுப்பினர்களில் 50%
- ஜி.எஸ்.டி. தொடர்பான சட்டம், விதிகள், வரிவிகிதம், வரி செலுத்தும் முறை போன்றவை தொடர்பாக பரிந்துரைத்தல்
- தீர்மானம் – 75% பெரும்பான்மை அடிப்படையில்.
- பதிவாகும் ஓட்டுகளில் மைய அரசுக்கு மூன்றில் ஒரு பங்கும் (1/3), அனைத்து மாநிலங்களுக்கு மூன்றில் இரண்டு பங்கும் (2/3) உள்ளன. எனவே, மைய அரசு தன்னிச்சையாக இம்மன்றத்தில் முடிவு மேற்கொள்ள இயலாது.

## GST Council - எடுக்கப்பட்ட முடிவுகள்

- மத்திய அரசு செப்டம்பர் 16, 2016 அன்று GST Council–ஐ அமைத்தது
- GST Council இதுவரை 27 கூட்டங்களை நடத்தியுள்ளது.
- இதுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து முடிவுகளும், ஒருமித்த கருத்தின் அடிப்படையில் தான் கூட்டுறவு கூட்டாட்சி அமைப்புக்கு எடுத்துக்காட்டாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- GST-ன் கீழ் பதிவு செய்வதற்கான உச்ச வரம்பு அளவு (threshold limit) ஆண்டொன்றுக்கு ரூ.20 இலட்சம்

  (முந்தைய VATசட்டத்தில் உச்ச வரம்பு அளவு ரூ.10 இலட்சம்)
- இணக்க முறைக்கான (compounding scheme) உச்ச வரம்பு அளவு (threshold limit) ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒரு கோடி
- (முந்தைய VATசட்டத்தில் உச்ச வரம்பு அளவு ரூ.50 இலட்சம்)
- இணக்க முறை திட்டம், உற்பத்தியாளர்கள் மற்றும் உணவு பொருட்கள் தயாரித்து வழங்கும் ஓட்டல்களுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.



## GST Compensation (இழப்பீடு)

- GST அமலாக்கத்தினால் மாநிலங்களுக்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பு 5 ஆண்டுகளுக்கு முழுமையாக வழங்கப்படும்
- 2015–2016–ஆம் ஆண்டின் வரி வருவாயினை அடிப்படையாக கொண்டு ஆண்டிற்கு 14% வளர்ச்சி விகிதத்தில் 5 ஆண்டுகளுக்கு இந்த வருவாய் இழப்பு ஈடு செய்யப்படும்
- இதற்காக இழப்பீடு சட்டம் (Compensation Law) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- இதன்படி இழப்பீட்டு தொகுப்பு நிதி (Compensation Fund) அமைக்கப்பட்டுள்ளது. சில பொருட்கள் [பான் மசாலா, புகையிலை, நிலக்கரி, காற்றூட்டப்பட்ட பானம், மகிழுந்துகள் (கார்கள்)] மீது Cess விதித்து இத்தொகுப்பு நிதியில் செலுத்தப்படுகிறது.

## சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு சிறு குறிப்பு

- சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட முதல் ஆண்டிலேயே வணிகர்கள் பதிவு பெறுவதற்கான விற்பனை தொகைக்கான உச்ச வரம்பு இருபது இலட்சமாக உயர்த்திய போதிலும், 31.03.2018 வரை, 3,12,517 வரி செலுத்துவோர் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளம் மூலம் (GSTIN) புதிய பதிவு எண் பெற்று வரி செலுத்தி வருகின்றனர்.
- அதேபோல், தமிழ்நாடு ஏற்றுமதி மாநிலமாக இருந்த சூழ்நிலையிலும், உள்மாநில நுகர்வு அதிகமான காரணத்தினால் மட்டும் அல்லாமல், பொருளாதார வளர்ச்சி முன்னேற்றம் அடைந்ததன் விளைவாக, ஜூலை 2017 முதல் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் 11.49% வளர்ச்சி அடைந்துள்ளது.
- உறுதி செய்யப்பட்ட வருவாய்க்கும், கிடைக்கப்பெற்ற வருவாய்க்கும் இடையேயான இடைவெளி கணிசமாகக் குறைந்துள்ளது. அதாவது குறைவாக இழப்பீடு பெறப்பட்ட மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது.



## சரக்குகள் மற்றும் சேவைகள் வரிவிகிதம்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் கீழ், சுமார்,

- 163 சரக்குகளுக்கும் மற்றும் 97 வகையான சேவைகளுக்கும் முழுவதுமாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- 263 சரக்குகள் மீது குறைந்த வரிவிகிதமான 5% வரி விதிக்கப்பட்டுள்ளது.
- 256 சரக்குகள் மீது 12% வரி விதிக்கப் பட்டுள்ளது.
- 607 சரக்குகள் மீது 18% வரி விதிக்கப் பட்டுள்ளது.
- 48 சரக்குகள் மீது அதிகபட்ச வரிவிகிதமான 28% வரி விதிக்கப்பட்டுள்ளது.
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்படுவதால், மாநில அரசுக்கு ஏற்படும் வரிவருவாய் இழப்பினை ஈடுசெய்யும் பொருட்டு 28% வரி விதிக்கப்படும் சில பொருட்கள் மீது மேல்வரி (CESS) விதிக்கப்படுகிறது.

- இது தவிர விலை உயர்ந்த கற்கள் மற்றும் தங்கம், வெள்ளி மற்றும் பிளாட்டினத்தால் ஆன 18 பொருட்கள் மீது 3% வரி விதிக்கப்பட்டுள்ளது.
- வைரம் மற்றும் விலை உயர்ந்த கற்கள் போன்ற 3 பொருட்களுக்கு 0.125% வரி விதிக்கப்பட்டுள்ளது .
- ரூபாய் ஒரு கோடி வரையிலான வரிக்குட்பட்ட விற்றுமுதல் உள்ள பதிவு பெற்ற வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் இணக்க முறையில் 1% வரியின் கீழ் வரி செலுத்த வழிவகை உள்ளது.
- இறக்குமதி மற்றும் வெளி மாநிலங்களுக்கு வழங்கப்படும் சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு, ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின்(IGST) கீழ் வரி விதிக்கப்படுகிறது.



## GST வரி விலக்கு/வரிக் குறைப்பு – தமிழ்நாடு கோரிக்கைகள்

- 84 இனங்களுக்கு வரி விலக்கு அளிக்கவும் மற்றும் வரி குறைப்பு கோரியும் தமிழ்நாடு அரசின் சார்பில் GST மன்றத்தில் முன்மொழிவுகள் வைக்கப்பட்டன.
- அம்முன்மொழிவுகளில் வணிக சின்னம் அல்லாத கருவாடு மற்றும் விபூதி ஆகியவைகளுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு அரசின் வேண்டுகோளை ஏற்று 29 விதமான பொருட்களுக்கு உதாரணமாக பட்டாசு, கடலை மிட்டாய், இட்லி தோசை மாவு, வறுகடலை, மீன்பிடி கயிறு மற்றும் வலைகள் உள்ளிட்ட பொருட்களுக்கு வரி குறைப்பு செய்யப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு அரசு கோரியதன் அடிப்படையில் 9 விதமான சேவைகளுக்கு உதாரணமாக ஜவுளி பொருட்கள் தொடர்பான சில்லரை வேலைகள், உணவு பொருட்கள் தயாரிப்புக்கான சில்லரை வேலைகள், அரசு ஒப்பந்தப் பணிகள் மற்றும் குளிர்சாதன வசதியுடன் கூடிய உணவகங்கள் / குளிர் சாதன வசதியற்ற உணவகங்கள் போன்ற சேவைகளுக்கு வரி குறைப்பு செய்யப்பட்டுள்ளது.
- GST மன்றத்தில் இதர 46 கோரிக்கைகளான ஜவ்வரிசி, கைத்தறி ஆடைகள், அலுமினிய பாத்திரங்கள், அலுமினிய கழிவுகள், அரிசி தவிடு, சானிடரி நாப்கின்கள் உள்ளிட்ட பொருட்களுக்கு வரி விலக்கு / வரி குறைப்பு செய்ய தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

## வரி செலுத்துவோரைப் பகிர்ந்தளித்தல்
## (Distribution of Tax Payers)

- முந்தைய மதிப்புக் கூட்டு வரியின் கீழ், வரி செலுத்துவோர் மத்திய மற்றும் மாநில சட்டங்களின் நேர்வுக்கேற்ப, மத்திய மற்றும் மாநில வரி அதிகாரிகள் ஆகிய இருவரையும் எதிர்கொள்ள நேரிட்டது.

- சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் வணிகர்கள் ஒரு சட்டம் மற்றும் ஓர் அதிகார அமைப்பினை மட்டும் எதிர் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

- மத்திய மற்றும் மாநில வரி நிர்வாகங்களுக்கு இடையேயான கூட்டு அதிகாரப் பகிர்வு (Cross Empowerment) காரணமாக வணிகர்கள் நடைமுறையில் எதிர்கொள்ளும் சுமைகள் பெரிதும் குறைக்கப்பட்டுள்ளன.

- நமது மாநிலத்தில், மத்திய மற்றும் மாநில வரி நிர்வாகங்களுக்கிடையேயான, வரி செலுத்தும் வணிகர்களைப் பகிர்ந்தளிக்கும் (Distribution of Tax Payers) பணி தற்பொழுது முடிவடைந்துள்ளது.



## வரி செலுத்துவோர் விவரம் (30.04.2018 வரை)

| பிரிவு | மத்திய அரசிற்கு வரி செலுத்தும் வணிகர்கள் எண்ணிக்கை | மாநில அரசிற்கு வரி செலுத்தும் வணிகர்கள் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|
| GST அமலாக்கப் படுவதற்கு முன் ரூ.1.5 கோடிக்கு கீழ் | 50175 | 451590 | 501765 |
| ரூ. 1.5 கோடிக்கு மேல் | 44009 | 43977 | 87986 |
| | | மொத்தம் | 589751 |
| GST அமலாக்கப்பட்ட பின் | 167281 | 166482 | 333763 |
| ஆக மொத்தம் | | | 923514 |
| VAT வரியில் பதிவு பெறுவதற்கான உச்சவரம்பு 10 இலட்சம். GST சட்டத்தில் வரி உச்ச வரம்பு 20 இலட்சம். | | | |

## பதிவுச் சான்றிதழ் பெறுதல்

ஜி.எஸ்.டி. சட்டத்தின் கீழ் பதிவு பெற விரும்புவோர், ஆண்டுக்கு மொத்த தொகை ரூ.20/– இலட்சத்திற்கு மிகையாகும்போது, 30 நாட்களுக்குள் பதிவு பெறுதல் வேண்டும். இப்பதிவுச் சான்றிதழ் நிரந்தர வருமானவரி எண்.(PAN) அடிப்படையின் பேரில் வழங்கப்படுவதால், விண்ணப்பிக்கும் நபரோ (அ) நிறுவனமோ, அத்தகைய PAN எண் கட்டாயம் பெற வேண்டியது முக்கிய நிபந்தனையாகும்.

விண்ணப்பிக்கும் போது கட்டணமோ, காப்பீடு தொகையோ செலுத்த தேவையில்லை. முற்றிலும் இலவச சேவையாக வழங்கப்படுகிறது.

விண்ணப்பம், PAN எண், இருப்பிடத்திற்கான சான்று ஆவணங்கள் (சொத்து வரி, மின்னிணைப்பு அட்டை, வாடகை ஒப்பந்தம் ஆகியவற்றின் நகல்கள்) முக்கியமாக, கைப்பேசி எண், இ–மெயில் முதலானவற்றை வலைத் தளம் "www.gst.gov.in" என்ற GST Network இணையதளத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும். முதலில் கைபேசி எண்ணும் இ–மெயிலும் சரிபார்க்கப்படும். பின்னர் ஒப்புகை, கணினி மூலமே வழங்கப்படும்.



மேலும், மூன்று வேலை நாட்களுக்குள் GSTIN (பதிவு எண்) சான்றிதழ், பதிவு செய்யப்பட்ட "இ–மெயில்" மூலம் வழங்கப்படும்.

1.7.2017 முதல் 31.3.2018 முடிய 3,12,517 வரி செலுத்துவோர், தமிழகத்தில் புதியதாக பதிவு செய்துள்ளனர்.

சுய விருப்பத்தின் பேரில், எவ்வளவு வழங்குதல் மொத்த தொகை இருப்பினும், பதிவு பெறலாம். ஆனால் பதிவு எண் பெற்ற வரி செலுத்துவோர் அனைவரும் மாதாந்திர / காலாண்டு நமூனாக்கள் தாக்கல் செய்ய வேண்டும்.

## GST Network (GSTN)

GST அமலாகத்திற்கான தொழில்நுட்ப கட்டமைப்பு மற்றும் சேவைகளை, வரி செலுத்துவோருக்கு மற்றும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு வழங்கும் பொருட்டு GST Network (GSTN அமைக்கப்பட்டுள்ளது.

## மின்னணுவழிப் பட்டி (e-way Bill)

- மதிப்பு கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் நமது மாநிலத்தின் எல்லையில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. GST–ன் கோட்பாடான, ஒரு தேசம், ஒரு வரி, ஒரு சந்தை எனபதற்கு இணங்க, நாடு முழுவதும் தங்கு தடையின்றி, வணிகப் போக்கு வரத்துக்கு ஏதுவாக 1.7.2017 முதல் அனைத்து சோதனைச் சாவடிகளும் மூடப்பட்டன. இதன் மூலம் சரக்கு போக்குவரத்து துரிதமாக செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் மின்னணு வழிப் பட்டி முறையானது, இதற்கு முன்பு சரக்குகளை எடுத்து செல்ல மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் நடைமுறையில் இருந்த வழி பட்டிக்கு மாற்றாக உள்ளது
- ரூ.1,00,000–க்கு மேல் உள்ள சரக்குகளை உள்மாநிலத்திலும், ரூ.50,000–க்கு மேல் உள்ள சரக்குகளை வெளிமாநிலத்திற்கோ எடுத்து செல்லும் நேர்வுகளில், மின்னணுவழிப் பட்டி உருவாக்கம் தேவையுள்ளது.



- சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளம் மூலம் மின்னணு வழிபட்டி உருவாக்கப்பட்டு, சரக்குகள் எடுத்து செல்வது உறுதி செய்யப்படுகின்றன. தற்பொழுது, நாடு முழுவதும் 1.4.2018 முதல் வெளி மாநிலங்களுக்கும், 02.06.2018 முதல் தமிழகத்திற்குள் சரக்குகளை அனுப்பும் பொழுது, மின்னணுவழிப் பட்டி கட்டாயமாக்கப் பட்டுள்ளது.
- இம்மாநிலத்தை பொருத்தமட்டில் உள்மாநில சரக்குகள் போக்குவரத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள 158 சரக்குகள் தவிர, மேலும் 100 சரக்குகள் மின்னணுவழிப் பட்டி எடுத்து செல்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

## வரி செலுத்தும் நமூனாக்கள்

- இணக்க வரி செலுத்தும் வணிகர்கள் மாதாந்திர நமூனாக்களுக்கு பதிலாக, ஒவ்வொரு காலாண்டு முடிந்தவுடன் நமூனா தாக்கல் செய்ய வேண்டும்.
- GSTR-1,2,3 மாதாந்திர நமூனாக்கள் மற்றும் GSTR-4 காலாண்டு நமூனா சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் வரையறுக்கப்பட்டது.
- GSTR 3-B என்ற நமூனா மட்டும் தற்போது தாக்கல் செய்யப்பட வேண்டும். பின்னர் GSTR1 மட்டும் தாக்கல் செய்ய வேண்டும். GSTR 2,3 தாக்கல் செய்ய வேண்டியதில்லை. இதற்கு பதில் ஒரே ஒரு நமூனா தாக்கல் செய்ய, மாநில அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று அளித்த அறிக்கையின் பேரில் GST மன்றம் GST Netwok-க்கு பரிந்துரைத்துள்ளது. அதன்படி, புதிய நமூனா ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.



## வரி செலுத்தும் முறை

- விருப்பப்பட்ட முறையில் அதாவது, இணையதள வங்கி கணக்கு (internet banking), கடன் அல்லது பற்று அட்டைகள் (Credit or Debit Cards), தேசிய மின் பண மாற்றம் (NEFT), உடனுக்குடன் முழு பைசல் (RTGS), செலுத்த வழி வகையுள்ளது.
- ரூ.10 ஆயிரம் வரை வரி செலுத்தும் சிறு வணிகர்கள் வரியினை வங்கிகளின் மூலமாகவும் செலுத்தலாம்.
- தாமதமாக செலுத்தும் வரியுடன் வட்டி செலுத்த வேண்டும்.

## தேசிய அளவிலான மிகை இலாப நோக்கத்திற்கு எதிரான அமைப்பு
## (National Anti Profiteering Authority)

பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வரி குறைக்கும் போது அதனால் ஏற்படும் விலை குறைப்பின் பயன் நுகர்வோருக்கு சென்றடைகிறதா என்பதை கண்காணிக்கும் முறை GST சட்டத்தில் உள்ளது. இதை நிவர்த்தி செய்வதற்காக தேசிய அளவிலான மிகை இலாப நோக்கத்திற்கு எதிரான அமைப்பு (National Anti Profiterring Authority) நிறுவப்பட்டுள்ளது.

மாநில அளவில் இந்த புகார்களை முன்னாய்வு செய்து தேசிய அளவிலான மிகை இலாப நோக்கத்திற்கு எதிரான அமைப்பிற்கு (NAPA) பரிந்துரை செய்ய, இணை ஆணையர் தலைமையில் முன்னாய்வு குழு (Screening Committee) அமைக்கப்பட்டுள்ளது.



## திருப்புத் தொகை (Refund)

GST சட்டத்தின் கீழ், திருப்புத்தொகை பெறும் முறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இணைய வழியில் திருப்புத்தொகை உரிய நேரத்தில் பெறுவதற்கு ஏதுவாக, GST சட்ட விதிகள் உள்ளன.

திருப்புத்தொகை கீழ்க்கண்ட தலைப்புகளின்கீழ் வழங்கப்படுகிறது.

1. ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளில் அடங்கியுள்ள உள்ளீட்டு வரி வரவு.
2. சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வழங்குகைகள் தொடர்பான உள்ளீடுகள் மீதான வரி வீதமானது (வரிவீதம் ஒன்றுமில்லாத அல்லது முழுவதும் விலக்களிக்கப்பட்ட வழங்குகைகள் அல்லாத பிற), வெளியீட்டு வழங்குகைகள் மீதான வரி வீதத்தை விட அதிகமாக இருக்கும் நேர்வில்.

இந்த திருப்புத் தொகை பெறுவதற்கான உரிய விண்ணப்பம் (GSTR RFD 01/01A) இணையதளம் மூலம் பெறலாம்.

உரிய அலுவலகத்தில் படிகளை வரி செலுத்துவோர் தாக்கல் செய்த பின், ஒப்புதல் வழங்கப்பட்ட ஏழு நாட்களுக்குள், தற்காலிக திருப்புத் தொகையாக விண்ணப்பத் தொகையின் 90%, மின்னணு முறையில் வழங்கப்படுகிறது.

விண்ணப்பங்களில் தவறுகள் இருப்பின் அதற்குரிய தாக்கீது வழங்கப்பட்டு, விளக்கம் பெற்று திருப்புத்தொகை வழங்கப்படுகிறது.

எஞ்சிய 10% திருப்புத்தொகை உரிய ஆவணங்கள் சரிபார்த்தபின் வழங்கப்படும்.

திருப்புத் தொகைக்கான மென்பொருள் செயல் வடிவம் பெற்றவுடன் திருப்புத்தொகை தரும் முறை மேலும் திறம்பட விளங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.



## GST அமலாக்கம்

தமிழகம் பொருட்களை உற்பத்தி செய்யும் மாநிலமாக இருப்பதால் GST வரிமுறைக்கு மாறுவதற்கு தயக்கம் ஏற்பட்டது. ஆனால் தமிழகம் நுகர்வோர் சார்ந்த மாநிலமாக இருப்பதாலும் GST அமல்படுத்துவது தொடர்பாக மத்திய அரசு கூட்டிய ஆலோசனைக் கூட்டங்களில் தமிழகம் சார்பில் மறுப்புக்கள் முன்வைக்கப்பட்டு, வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் பாதிப்பு அடைய மாட்டார்கள் என்பதையும், வரிவருவாய் குறையாது என்பதையும் உறுதிசெய்து, GST சட்ட மசோதாவில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே GST வரிமுறையை தமிழகம் ஏற்றுக்கொண்டது.

மேலும் 2015–2016 ஆம் ஆண்டின் வளர்ச்சி வீதத்தை அடிப்படையாகக் கொண்டு GST வரிமுறையில் வரிவசூல் குறைந்தால் இழப்பீடு வழங்கப்படும் என்கிற உத்திரவாதம் பெறப்பட்டது. தற்போது தமிழகத்தில் பொதுமக்களும் வணிகர்களும் GST வரிமுறையை ஏற்றுக் கொண்டுள்ளதால் GST வரிமுறை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## CONTACT AND HELP DESK DETAILS

| | | |
|---|---|---|
| COMMON PORTAL | : | www.gst.gov.in<br>(Registration, Return, Payment<br>முதலான சேவைகளுக்கு) |
| Help Desk (All India) | : | 0120 – 4888999 |
| Help Desk (Tamil Nadu) | : | 1800 – 103 – 6751 |
| Tamil Nadu CT Department Website | : | www.ctd.tn.gov.in |
| For Grievances (All India) | : | www.selfservice.gstsystem.in |
| E-mail (Tamil Nadu) | : | helpdesk@ctd.tn.gov.in |

(C)
தமிழ்நாடு அரசு
2018


தமிழ்நாடு அரசு வணிகவரித்துறை
சரக்குகள் மற்றும் சேவைகள் வரி